

தலைமைச் செயலகத்தில், நேற்று (13.11.2025) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில், பொங்கல் 2026 வேட்டி சேலை வழங்கும் திட்டம், பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் துறைச் சார்ந்த திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் திருமதி வே. அமுதவல்லி, கைத்தறி துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திருமதி கவிதா ராமு, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் திட்டக்குடி பகுதியைச் சேர்ந்த திமுக நகர துணைச் செயலாளரும், பி.எல்.ஏ. பொறுப்பாளருமான சேட்டு (48) என்பவர் அடையாளம் தெரியாத வாகனம் மோதியதாக கூறப்படுகிறது. இதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று இறந்தார். இதனை அறிந்த அமைச்சரும், கடலூர் மேற்கு மாவட்ட செயலாளருமான சி.வெ.கணேசன் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். ஒன்றிய செயலாளர் அமித்தலிங்கம், திட்டக்குடி நகர செயலாளர் பரமகுரு ஆகியோர் உடனிருந்தனர்.

### சித்தையன்கோட்டையில்

# புதிய நூலகத்தை திறந்து வைத்து புதிய புத்தகங்கள்!

## அமைச்சர் ஐ. பெரியசாமி வழங்கினார்!

திண்டுக்கல், நவ. 14-

சித்தையன்கோட்டையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் நூலகத்தை திறந்து வைத்து மாணவர்களுக்கு வழங்கப்படும் புத்தகங்களை பார்வையிட்டார். தனக்கு அன்பளிப்பாக வந்த புத்தகங்களை ஆத்தூர் தொகுதியில் உள்ள நூலகங்களுக்கு வழங்குவதாக அமைச்சர் கூறினார்.

விழாவிற்கு பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயமாலு தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் போதும்பொன்னு முரளி வரவேற்றார்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி நூலகத்தை திறந்து வைத்தார்.

அதன்பின்னர் புத்தகங்கள் வைத்திருக்கும் அறையை பார்வையிட்டார்.

அப்போது கலைஞர் நெஞ்சுக்கு நீதி புத்தகத்தை பார்வையிட்ட அவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் எழுதிய புத்தகங்கள் நூலகத்தில் எத்தனை உள்ளது என கேட்டதோடு தனக்கு அன்பளிப்பாக வரும் புத்தகங்கள் அதிகம் உள்ளன. அவற்றை ஆத்தூர் தொகுதியில் உள்ள நூலகங்களுக்கு பகிர்ந்தளிக்க உள்ளதாக தேரிவித்தார்.

நிகழ்ச்சியில் கழக மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, ஒன்றிய செயலாளர் ராமன், மாவட்ட பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன்,

ஆத்தூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. அவைத்தலைவர் காணிக்கை சாமி, பேரூராட்சி மன்றதலைவர் ரேகா அய்யப்பன், சித்தையன் கோட்டை பேரூராட்சி செயலாளர் சக்திவேல், பேரூராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் தங்கபாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் நாக லெட்சுமி சசிகுமார், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பேரூராட்சி தலைமை எழுத்தர் கவின், வார்டு உறுப்பினர்கள் லாவண்யா சுரேஷ், தியாகு, பபிதா பானு, பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் அபுபக்கர், குழாய் பொருத்துநர் ஜெயராஜ், கணிணி ஆப்ரேட்டர் பாலா, மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. மீனவர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. மீனவர் அணி ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பி.கீதாஜீவன் தலைமையில் மாநில மீனவர் அணி துணை செயலாளர் துறைமுகம்.சி.புளோரன்ஸ்,மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பி. அந்தோணிஸ்டாலின் முன்னிலையில் நாளை (15.11.2025 -சனிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மீனவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1.மீனவர் தினம் கொண்டாடுவது - குறித்து.

2.SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) - குறித்து.

3.கழக வளர்ச்சிப் பணி

**அமைச்சர் பி.கீதாஜீவன்**
செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

### திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்

# மாதந்தோறும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு விழா!

## வருவாய் ஆய்வாளர் இரா.இராம்பிரதீபன் பரிசுப் பெட்டகங்கள் வழங்குகிறார்!

திருவண்ணாமலை, நவ.14-

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர்நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டுவருகிறது. வருவாய் ஆய்வாளர் இரா.இராம்பிரதீபன் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாடவீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர். அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த ஜூலை மாதம் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

16.11.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெறவுள்ளது.

விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகிக்கிறார்.

அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சி.இ.ஒ.பேராசிரியர் அசோக் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். விழாவில் கலந்து கொண்டு மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசுகிறார். நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் பிரியா ப.விஜயரங்கன் நன்றி கூறுகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, ப.கார்த்திவேல்மாறன், இல.குணசேகரன் ஆகியோர் செய்து வருகின்றனர்.

### நெல்லை மாவட்டத்தில்

# 14வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு-ஆட்சியர் மரு.இரா.சுகுமார்-கே.ஆர்.ராஜு வரவேற்பு!

நெல்லை.நவ.14-

நெல்லை மாவட்டம் பாளையங் கோட்டை வ.உ.சி மைதானத்தின் உள் விளையாட்டரங்கில் அன்று (12.11.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை தந்த 2025ஆம் ஆண்டிற்கான 14வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலக கோப்பையினை சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில்,துணை மேயர் கே.ஆர்.ராஜு முன்னிலையில் வரவேற்று காட்சிப்படுத்தினார்.

2025ஆம் ஆண்டுக்கான ஆண்கள் FIH ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பால் நடத்தப்படுகிறது.21 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான போட்டிகள் நடைபெறுகிறது.

இப்போட்டியானது 14வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலக கோப்பையாகும்.ஹாக்கி விளையாட்டில் முன்னணி வகிக்கின்ற இந்தியா,

அர்ஜென்டினா,சீனா, நியூசிலாந்து பிரான்சு, ஆஸ்திரேலியா,கொரியா, ஜெர்மினி ஆகிய நாடுகள் உள்ளிட்ட 24 நாடுகள் கலந்து கொள்ளும் ஆண்களுக்கான ஜூனியர் உலகக்கோப்பை ஹாக்கி போட்டிகள் நவம்பர் 28 முதல் டிசம்பர் 10, 2025 வரை இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள சென்னை மற்றும் மதுரையில் நடைபெறுகிறது.

போட்டியின் சாராம்சம் முதல்முறையாக 24 அணிகள் பங்கேற்கிறது.ஜூனியர் உலகக்கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா 2001 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் தங்கப் பதக்கங்களையும் 1997இல் வெள்ளி பதக்கத்தையும் வென்றுள்ளது .


இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கான உலக கோப்பையை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அறிமுகம் செய்வதற்கான வாகனகுழு பயணத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நவம்பர் 10ஆம் தேதி அன்று சென்னையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். அதன் ஒரு பகுதியாக, இன்றையதினம் பாளையங்கோட்டை வ.உ.சி உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், தலைமையில்,14வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலக கோப்பையினை அறிமுகப்படுத்தி, போட்டியின் சின்னமான காங்கேயனை காட்சிப்படுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து, அம்பாசமுத்திரம் வேல்ஸ் வித்யாலயா பள்ளியிலும் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில்,மண்டல முதுநிலை மேலாளர் சிவா,மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் கிருஷ்ண சக்கரவர்த்தி, கபடி அர்ஜுனா விருது பெற்ற வீரர் மனத்தி கணேசன்,சர்வதேச கைப்பந்து வீரர் சிவராஜன், சர்வதேச தடகளம் வீரர் ரோசிட்டோ சாக்ஸ், சர்வதேச தடகளம் வீராங்கனை எட்வினா ஜெய்சன், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி துணைத்தலைவர் க.இசக்கி பாண்டி, நம்பி உட்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.வி.என். சோமு

### நவம்பர் 14 (1997)



**திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களில் ஒருவராகவும், கழக அமைப்புச் செயலாளராகவும், சட்டத்துறைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சராக பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சியில் துணை மேயராகப் பணியாற்றியவர்.**

**குழந்தைப் பருவத்திலேயே தன்னுடைய தாயாரோடு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் 1938ஆம் ஆண்டு சிறைச் சாலையிலே இருந்தவர். அதுமுதல் கழகத்திற்காக பல தியாகங்கள் செய்து, சிறைக் கோட்டங்களுக்கு சென்று களம் பல கண்டு கழகத் தலைமை இடுகின்ற கட்டளைகளையெல்லாம் சிரமேல் தாங்கி அரும் தொண்டாற்றியவர்" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மரக்காணம் ஒன்றியம் கீழ் அருங்குணம் ஊராட்சியில்

# ரூ. 2.63 கோடி மதிப்பீட்டில் குன்னப்பாக்கம் சாலையை அகலப்படுத்தி புதிய தார்சாலை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார்!

திண்டிவனம், நவ.14-

விழுப்புரம் மாவட்டம் நெடுஞ்சாலைத்துறை சார்பில் மரக்காணம் ஒன்றியம்பெருமுக்கல்குன்னப்பாக்கம், செல்லும் சாலையை 2கோடியே 62லட்சத்தி 73ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்ஒரு வழி தடத்திலிருந்து இடைவழித் தடமாக மாற்றி அகலப்படுத்தி சாலையை வலுப்படுத்துதல், மற்றும் பெட்டி வடவ பாலம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா கீழ் அருங்குணம் ஊராட்சியில் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமையில் துணை சேர்மன் பழனி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 2.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார் சாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்துபொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,மாவட்ட துணை சேர்மன் ஷீலா தேவி சேரன், நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் கவிதா,தீனதயாளன், கோகுலகிருஷ்ணன்,ராஜேஸ்வரி லட்சுமிபதி, சிவானந்தம், நாகஜோதி கணேஷ்,நல்லாலம் ஊராட்சி மன்ற தலைவர் சரவணன்,ஊராட்சி மன்ற துணைத் தலைவர்மதி மோகன், ஒன்றிய நிர்வாகிகள் ரவிச்சந்திரன், வடிவேல், பாபு, சுமதி பார்த்தசாரதி, சுரேஷ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர்நல அணி அமைப்பாளர்திருமலை, தேவதாஸ்,நிர்வாகிகள் மாணிக்கம், முருகன், செந்தில், விநாயகம், மாணவரணிபிரகாஷ், நாராயணசாமி, ஜெகநாதன், தேசிங்கு முனுசாமி,உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சோழிங்கநல்லூர் தொகுதி 186 புழுதிவாக்கம் சென்னை துவக்கப்பள்ளியில் சென்னை மாநகராட்சியின் நிதியிலிருந்து ரூபாய் 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக 7 எண்ணிக்கையில் வகுப்பறைகள் கட்டும் பணியினை ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. துவங்கி வைத்தார். இந்நிகழ்வில், ஜெ.கே.மணிகண்டன் எம்.சி., தலைமை ஆசிரியர், மாநகராட்சி அதிகாரிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.